முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.
முன்னிலை - திரு.ஜி.அசோக் பிரசாத், B.A., B.L., M.S.E.N.,
முதல் கூடுதல் சார்பு நீதிபதி,
2025 ம் வருடம் செப்டம்பர் மாதம் 20 ம் நாள் சனிக்கிழமை
(திருவள்ளுவராண்டு 2056 – விசுவாவசு வருடம் - புரட்டாசி திங்கள் 4 ம் நாள்)
நிறைவேற்று மனு எண்.10/2023
அசல் வழக்கு எண்.52/2019

1. எஸ்.ஸ்ரீதர்,

2. நீலாம்பாள்

3. மோனிகா ..மனுதாரர்கள்/1 முதல் 3 பிரதிவாதிகள்

// எதிர் //

எம்.பரிமளா ..எதிர்மனுதாரர்/வாதி

17.07.2023 மற்றும் 27.11.2023 தேதியிட்ட இம்மனு காலவரையறை சட்டம் பிரிவு 5ன் படி மனுதாரர்கள்/1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு எதிராக அசல் வழக்கில் 25.03.2022 தேதியில் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச தீர்ப்பாணையை ரத்து செய்ய மனு தாக்கல் செய்வதில் ஏற்பட்ட 5 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து உத்தரவிடக் கோரப்பட்டுள்ளது.

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக 20.09.2025 ம் தேதி இறுதியாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, மனுதாரர் தரப்பில் திரு.ஏ.சீனிவாசன், வழக்கறிஞர் அவர்களும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் திரு.I.C.வாசுதேவன், வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டும், இதுநாள்வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து மனு கோப்பைப் பரிசீலனை செய்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

உத்தரவு

மனுதாரர்கள்/1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு எதிராக அசல்

வழக்கில் 25.03.2022 தேதியில் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச தீர்ப்பாணையை ரத்து செய்ய மனு தாக்கல் செய்வதில் ஏற்பட்ட 5 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து உத்தரவிடக் கோரி காலவரையறை சட்டம் பிரிவு 5ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனு உரையின் சுருக்கம் பின்வருமாறு:

3. மனுதாரர் இந்த மனுவில் 1-ம் மனுதாரர் என்றும், மேற்படி தாவாவில் 1-ம் பிரதிவாதி என்றும் இந்த மனுவில் 2-ம் மனுதாரர்/2-ம் பிரதிவாதி தனது மனைவி என்றும், இந்த மனுவில் 3-ம் மனுதாரர்/3-ம் பிரதிவாதி தனது மகள் என்றும், மேற்படி அசல் வழக்கில் கடந்த 25.03.2022 தேதியில் தங்கள் மீது ஏற்பட்ட ஒருதலைபட்ச தீர்ப்பை ரத்து செய்யக்கோரி தாங்கள் 24.04.2022 தேதியில் தாக்கல் செய்த மனுவானது மற்ற வழக்கறிஞர் ஒருவரது கட்டுடன் கலந்துவிட்டபடியால் அந்த மனுவை கண்டுபிடித்த தேதியான 29.04.2022 தேதியில் சமூகம் நீதிமன்றத்தில் தங்களது வழக்கறிஞர் தாக்கல் செய்துள்ளார் என்றும், இதுபற்றிய விவரம் மேற்படி மனுவை திரும்பப்பெற்ற போது தெரியும் என்றும், தங்கள் மனு தவறுதலாக வேறு கட்டுடன் கட்டுகளாக கலந்துவிட்டபடியால் மறுதாக்கல் உரிய காலத்தில் தாக்கல் செய்ய இயலவில்லை, எனவே மறுதாக்கல் செய்ய ஏற்பட்ட 5 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து இம்மனுவை ஏற்று உத்திரவு பிறப்பிக்க வேண்டுமென்றும், இல்லையென்றால் மனுதாரருக்கு பெருத்த கஷ்ட நஷ்டங்கள் ஏற்படுமென்றும், அதனால் இந்த மனு தாக்கல் செய்திருப்பதாக கூறப்பட்டுள்ளது.

4. எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்:-

5. மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனு சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. எதிர்மனுதாரரால் ஒப்புக் கொள்ளப்படும் சங்கதிகளைத் தவிர மற்ற சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்கக் கடமைப்பட்டவர் ஆவார்.

6. மனுதாரர் மனுவுடன் தாக்கல் செய்துள்ள பிரமாணப்பத்திரிக்கையில் கண்டுள்ள சங்கதிகளான, மேற்படி அசல் வழக்கில் கடந்த 25.03.2022 தேதியில் மனுதாரர்கள் மீது ஏற்பட்ட ஒருதலைபட்டச தீர்ப்பை ரத்து செய்யக்கோரி மனுதாரர்கள் 24.04.2022 தேதியில் தாக்கல் செய்த மனுவானது மற்ற வழக்கறிஞரின் கட்டுடன் கலந்துவிட்டபடியால் அந்த மனுவை கண்டுபிடித்து 29.04.2022 ம் தேதியில் சமூக நீதிமன்றத்தில் மனுதாரர் வழக்கிறஞர் தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்கண்ட விபரம் மேற்கண்ட மனுவை திரும்ப பெற்ற போது தெரியவந்ததாகவும், மனுதாரர்களின் மனு தவறுதலாக வேறு கட்டுடன் கலந்துவிட்டபடியால் உரிய காலத்தில் மனு தாக்கல் செய்ய இயலவில்லை என்றும், எனவே மனு தாக்கல் செய்ய ஏற்பட்ட 5 நாட்கள் காலதாமத்தை மன்னித்து இம்மனுவை ஏற்றுக் கொள்ளவேண்டியது என்றும், இல்லையென்றால் மனுதாரர்களுக்கு பெருத்த கஷ்ட நஷ்டங்கள் ஏற்படும் என்று சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் தவறு.

7. இந்த எதிர்மனுதாரர் மேற்கண்ட வழக்கினை மனுதாரர்களுக்கு எதிராக பாகபிரிவினை கோரி கடந்த 2019 ம் ஆண்டு சமூக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. மனுதாரர்களுக்கு உரிய கால அவகாசங்கள் வழங்கியும் மனுதாரர்களுக்கு இவ்வழக்கினை எதிர்கொள்ள போதிய முகாந்திரம் இல்லாததாலும், எதிர்உரை தாக்கல் செய்யாமல் வேண்டும் என்றே இவ்வழக்கை காலம் கடத்தி வந்தனர். இந்நிலையில் கடந்த 22.08.2019 ம் தேதியன்று சமூக நீதிமன்றம் மனுதாரர்களை தோன்றா தரப்பினர் என்று அறிவித்தும், இந்த எதிர்மனுதாரர் கோரியவாறு மேற்கண்ட வழக்கில் முதல் நிலைத்தீர்ப்பானை பிரப்பித்து உத்திரவிடப்பட்டது.

8. மேற்கண்ட அசல் வழக்கில் பிரப்பித்த முதல் நிலைத்தீர்ப்பனை படி இறுதி நிலைத்தீர்பானை பிறப்பிக்க கோரி இந்த எதிர்மனுதாரர் சமூக நீதிமன்றத்தில் இடைமனு எண்.6/2022 மனு தாக்கல் செய்து

அம்மனுவிலும் மனுதாரர்கள் ஆஜராகி எதிருரை தாக்கல் செய்யாத காரணத்தினால் சமூக நீதிமன்றம் மனுதாரர்களை தோன்றாதரப்பினராக அறிவித்து உத்தரவு பிறப்பித்தது.

9. மனுதாரர்கள் மேற்கண்ட வழக்கில் எதிருரை தாக்கல் செய்யாத காரணத்தினால் மனுதாரர்களுக்கு எதிராக கடந்த 25.03.2022 ம் தேதியில் ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. மேற்கண்ட வழக்கில் மனுதாரர்களுக்கு எதிராக 25.03.2022 ம் தேதியில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பினை ரத்து செய்ய கோரி மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவுடன் மனுதாரர்கள் மேற்கண்ட வழக்கில் தாக்கல் செய்யவேண்டிய எதிருரையை தாக்கல் செய்யவில்லை. அதற்கான நகல்களும் இந்த எதிர்மனுதாரருக்கு மனுதாரரால் வழங்கப்படவில்லை.

10. மனுதாரர்களுக்கு மேற்கண்ட வழக்கில் சட்டப்படி எதிர்கொள்ள போதிய எதிர்வாதம் இல்லாத காரணத்தினாலும் இந்த எதிர்மனுதாரருக்கு சட்டப்படி கிடைக்க உள்ள பரிகாரத்தினை காலதாமதம் படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் பொய்யான காரணங்களை கூறி மேற்படி மனுவினை மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ளனர். மனுதாரர்கள் பிரமாணப்பத்திரிக்கையில் சொல்லியுள்ள காரணங்கள் சட்டப்படி நிலைக்கதக்கதல்ல, மேலும் மனுவிற்காக உருவாக்கப்பட்ட கற்பனை கதையாகும். எனவே இம்மனு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்று கூறப்பட்டுள்ளது.

11. இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினையாகும்.

12. <u>பிரச்சினைக்குத் தீர்வு:</u>

13. மனுதாரர்கள் தரப்பில், மனுதாரர் இந்த மனுவில் 1-ம் மனுதாரர் என்றும், மேற்படி தாவாவில் 1-ம் பிரதிவாதி என்றும் இந்த மனுவில் 2-ம் மனுதாரர்/2-ம் பிரதிவாதி தனது மனைவி என்றும், இந்த மனுவில் 3-ம் மனுதாரர்/3-ம் பிரதிவாதி தனது மகள் என்றும்,

மேற்படி அசல் வழக்கில் கடந்த 25.03.2022 தேதியில் தங்கள் மீது ஏற்பட்ட ஒருதலைபட்ச தீர்ப்பை ரத்து செய்யக்கோரி தாங்கள் 24.04.2022 தேதியில் தாக்கல் செய்த மனுவானது மற்ற வழக்கறிஞர் ஒருவரது கட்டுடன் கலந்துவிட்டபடியால் அந்த மனுவை கண்டுபிடித்த தேதியான 29.04.2022 தேதியில் சமூகம் நீதிமன்றத்தில் தங்களது வழக்கறிஞர் தாக்கல் செய்துள்ளார் என்றும், இதுபற்றிய விவரம் மேற்படி மனுவை திரும்பப்பெற்ற போது தெரியும் என்றும், தங்கள் மனு தவறுதலாக வேறு கட்டுடன் கட்டுகளாக கலந்துவிட்டபடியால் மறுதாக்கல் உரிய காலத்தில் தாக்கல் செய்ய இயலவில்லை, எனவே மறுதாக்கல் செய்ய ஏற்பட்ட 5 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து இம்மனுவை ஏற்று உத்திரவு பிறப்பிக்க வேண்டுமென்றும், இல்லையென்றால் மனுதாரருக்கு பெருத்த கஷ்ட நஷ்டங்கள் ஏற்படுமென்றும் என்று வாதிடப்பட்டது.

14. எதிர்மனுதாரர் தரப்பில், இந்த எதிர்மனுதாரர் மேற்கண்ட வழக்கினை மனுதாரர்களுக்கு எதிராக பாகபிரிவினை கோரி கடந்த 2019 ம் ஆண்டு சமூக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. மனுதாரர்களுக்கு உரிய கால அவகாசங்கள் வழங்கியும் மனுதாரர்களுக்கு இவ்வழக்கினை எதிர்கொள்ள போதிய முகாந்திரம் இல்லாததாலும், எதிர்உரை தாக்கல் செய்யாமல் வேண்டும் என்றே இவ்வழக்கை காலம் கடத்தி வந்தனர். இந்நிலையில் கடந்த 22.08.2019 ம் தேதியன்று சமூக நீதிமன்றம் மனுதாரர்களை தோன்றா தரப்பினர் என்று அறிவித்தும், இந்த எதிர்மனுதாரர் கோரியவாறு மேற்கண்ட வழக்கில் முதல் நிலைத்தீர்ப்பானை பிரப்பித்து உத்திரவிடப்பட்டது.

15. மேற்கண்ட அசல் வழக்கில் பிரப்பித்த முதல் நிலைத்தீர்ப்பனை படி இறுதி நிலைத்தீர்பானை பிறப்பிக்க கோரி இந்த எதிர்மனுதாரர் சமூக நீதிமன்றத்தில் இடைமனு எண்.6/2022 மனு தாக்கல் செய்து அம்மனுவிலும் மனுதாரர்கள் ஆஜராகி எதிருரை

தாக்கல் செய்யாத காரணத்தினால் சமூக நீதிமன்றம் மனுதாரர்களை தோன்றாதரப்பினராக அறிவித்து உத்தரவு பிறப்பித்தது.

16. மனுதாரர்கள் மேற்கண்ட வழக்கில் எதிருரை தாக்கல் செய்யாத காரணத்தினால் மனுதாரர்களுக்கு எதிராக கடந்த 25.03.2022 ம் தேதியில் ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. மேற்கண்ட வழக்கில் மனுதாரர்களுக்கு எதிராக 25.03.2022 ம் தேதியில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பினை ரத்து செய்ய கோரி மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவுடன் மனுதாரர்கள் மேற்கண்ட வழக்கில் தாக்கல் செய்யவேண்டிய எதிருரையை தாக்கல் செய்யவில்லை. அதற்கான நகல்களும் இந்த எதிர்மனுதாரருக்கு மனுதாரரால் வழங்கப்படவில்லை.

17. மனுதாரர்களுக்கு மேற்கண்ட வழக்கில் சட்டப்படி எதிர்கொள்ள போதிய எதிர்வாதம் இல்லாத காரணத்தினாலும் இந்த எதிர்மனுதாரருக்கு சட்டப்படி கிடைக்க உள்ள பரிகாரத்தினை காலதாமதம் படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் பொய்யான காரணங்களை கூறி மேற்படி மனுவினை மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ளனர். மனுதாரர்கள் பிரமாணப்பத்திரிக்கையில் சொல்லியுள்ள காரணங்கள் சட்டப்படி நிலைக்கதக்கதல்ல, மேலும் மனுவிற்காக உருவாக்கப்பட்ட கற்பனை கதையாகும். எனவே இம்மனு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்று செய்யவேண்டுமென்று வாதிடப்பட்டது.

18. மனு மற்றும் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்ததில் 1 முதல் 3 மனுதாரர்கள் மேற்படி அசல் வழக்கில் 1 முதல் 3 பிரதிவாதிகள் ஆவார். மேற்படி அசல் வழக்கில் கடந்த 25.03.2022 ம் தேதியில் மனுதாரர்கள் மீது ஏற்பட்ட ஒருதலைபட்ச தீர்ப்பை ரத்து செய்யக்கோரி தாங்கள் 24.04.2022 தேதியில் தாக்கல் செய்த மனுவானது மற்ற வழக்கறிஞர் ஒருவரது கட்டுடன் கலந்துவிட்டபடியால் அந்த மனுவை கண்டுபிடித்த தேதியான 29.04.2022 தேதியில் சமூகம் நீதிமன்றத்தில் தங்களது வழக்கறிஞர் தாக்கல் செய்துள்ளார் என்றும், இதுபற்றிய விவரம் மேற்படி மனுவை திரும்பப்பெற்ற போது தெரியும் என்றும்,

தங்கள் மனு தவறுதலாக வேறு கட்டுடன் கட்டுகளாக கலந்துவிட்டபடியால் மறுதாக்கல் உரிய காலத்தில் தாக்கல் செய்ய இயலவில்லை என்றும் கூறப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில், மனுதாரர்கள் மேற்கண்ட வழக்கில் எதிருரை தாக்கல் செய்யாத காரணத்தினால் மனுதாரர்களுக்கு எதிராக கடந்த 25.03.2022 ம் தேதியில் ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. மேற்கண்ட வழக்கில் மனுதாரர்களுக்கு எதிராக 25.03.2022 ம் தேதியில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பினை ரத்து செய்ய கோரி மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவுடன் மனுதாரர்கள் மேற்கண்ட வழக்கில் தாக்கல் செய்யவேண்டிய எதிருரையை தாக்கல் செய்யவில்லை. அதற்கான நகல்களும் இந்த எதிர்மனுதாரருக்கு மனுதாரரால் வழங்கப்படவில்லை என்றும், மனுதாரர்களுக்கு சட்டப்படி எதிர்கொள்ள போதிய எதிர்வாதம் இல்லாத காரணத்தினாலும் இந்த எதிர்மனுதாரருக்கு சட்டப்படி கிடைக்க உள்ள பரிகாரத்தினை காலதாமதம் படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் பொய்யான காரணங்களை கூறி மேற்படி மனுவினை மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ளனர். மனுதாரர்கள் பிரமாணப்பத்திரிக்கையில் சொல்லியுள்ள காரணங்கள் சட்டப்படி நிலைக்கதக்கதல்ல, மேலும் மனுவிற்காக உருவாக்கப்பட்ட கற்பனை கதை என்றும், எனவே இம்மனு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்று செய்யவேண்டுமென்று கூறப்பட்டுள்ளது. மனுதாரர் தனது மனுவில் ஒருதலைப்பட்ச தீர்ப்பாணையை ரத்து செய்ய கோரும் மனு வேறு ஒரு வழக்கறிஞர் கட்டுடன் கலந்துவிட்டபடியால் தாக்கல் செய்ய முடியவில்லை என்று கூறும் காரணம் ஏற்றுக்கொள்ளும்படியாக உள்ளது. மேற்படி அசல் வழக்கில் மனுதாரர்/பிரதிவாதிகளுக்கு தங்களது தரப்பை நிரூபிக்க ஒரு வாய்ப்பு வழங்குவது நீதியின் நலனுக்கு உகந்தது என இந்நீதிமன்றம் முடிவுக்கு வந்து இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுகிறது.

முடிவாக, இம்மனுவை அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் சுருக்கெழுத்தில் எடுக்கப்பட்டு பின்பு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2025ம் வருடம் செப்டம்பர் மாதம் 20ம் நாள் அவையறிய திறந்த இந்நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

G ASHOK PRASATH Digitally signed by G ASHOK PRASATH

முதல் கூடுதல் சார்பு நீதிபதி,

ஈரோடு.

<u>சாட்சிய சான்றாவணப் பட்டியல்</u>

(இருதரப்பிலும் .. தாக்கல் இல்லை...)

G ASHOK PRASATH Digitally signed by G ASHOK PRASATH

முதல் கூடுதல் சார்பு நீதிபதி,

ஈரோடு.

அசல்/வரைவு உத்தரவு
இ.ம.எண்.10/2023
அ.வ.எண்.52/2019
நாள் 20.09.2025
மு.கூ.சா.நீ.ம., ஈரோடு.